**தேசிய விவசாய வாணிப அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - 2013**

---

தேசிய விவசாய வாணிப அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் (என்ஏடீஈபீ) 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) விவசாய அபிவிருத்திக்கான தேசிய நிதியத்திற்கும் (ஐஎவ்ஏடீ) இடையே கைச்சாத்திடப்பட்ட 2010 பெப்ரவரி 23 ஆந் திகதிய 797-எல்கே ஆம் இலக்க நிதி உடன்படிக்கையின் IX ஆம் உறுப்புரையிலுள்ள 9.03 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்ட அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியிடல் மற்றும் செயற்திட்டக் காலம்

---

தேசிய விவசாய வாணிப அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி உடன்படிக்கையின் படி, இலங்கை மத்திய வங்கி முன்னனி நிகழ்ச்சித்திட்ட முகவராக இருப்பதுடன் நிகழ்ச்சித்திட்ட அமுலாக்கலிற்கு ஒட்டுமொத்த பொறுப்பினைக் கொண்டுள்ளது. இருப்பினும், 2013 சனவரியில் இடம்பெற்ற ஐஎவ்ஏடீ இன் பிந்திய இடைக்கால மீளாய்வு பிரதிநிதிகளின் பரிந்துரைகளின் படி, 2013 மே முதல் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு முன்னனி நிகழ்ச்சித்திட்ட முகவராக இருப்பதுடன் நடைமுறையிலுள்ள ‘‘திவிநெகும’’ நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைத்து நிகழ்ச்சித்திட்டத்தினை அமுல்படுத்தவதற்கான ஒட்டுமொத்த பொறுப்பினைக் கொண்டுள்ளதுடன் இலங்கை மத்திய வங்கி நுண்பாக நிதியிடல் உப கூறின் அமுலாக்கல் முகவராக உள்ளது. (அ) சந்தைச் சங்கிலி அபிவிருத்தியில் பங்குபற்றுதல் மற்றும் பண்ணை உற்பத்தி விலைகளை முன்னேற்றுகின்ற இணைந்த கூறுகள், பண்ணை உற்பத்தி விளைவுதிறன் மற்றும் செயன்முறைப்படுத்தப்பட்ட பண்ணை உற்பத்திப்பொருட்களிற்கு பெறுமதிசேர்த்தல் ஊடாக விசேடமாக இளைஞர்களது வருமானத்தை அதிகரிக்கச் செய்தல் மற்றும் (ஆ) காணியற்றவர்களிற்கும் இளைஞர்களிற்கும் வேலைவாய்ப்புக்களை மேம்படுத்தி அதிகரிப்பதற்காக நிதிகளையும் பயிற்சிகளையும் வழங்குவதன் மூலம் சிறிய விவசாயிகள் மற்றும் காணியற்றவர்களிற்கு உதவியளிப்பதே நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோள்களாகும். நிதி உடன்படிக்கையின்படி நிகழ்ச்சித்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் முறையே ஐ.அ.டொ. 32.9 மில்லியனாவதுடன் ஐ.அ.டொ. 25 மில்லியன் ஐஎவ்ஏடீ இனால் நிதியளிப்பதற்கு இணங்கப்பட்டதுடன் ஐ.அ.டொ. 1 மில்லியன் ஜீஓஎஸ்எல் இடமிருந்தும் ஐ.அ.டொ. 6.9 மில்லியன் தனியார் கம்பனிகள், உற்பத்தியாளர்கள், சமூக அடிப்படை அமைப்புக்கள் மற்றும் பங்குபற்றல் நிதி நிறுவனங்களிடமிருந்து பெறப்படும். செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2011 பெப்ரவரி 01 இல் தொடங்கியிருந்ததுடன் 2015 திசெம்பர் அளவில் முடிவுறுத்துவதற்கு பட்டியலிடப்பட்டுள்ளது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வைபார்த்தல்களினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், மற்றும் நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக்

கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்ககான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்று நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள் சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான நிகழ்ச்சித்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம், நிகழ்ச்சித்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், மானியம் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதி உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன நிகழ்ச்சித்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(உ) நிகழ்ச்சித்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(ஊ) நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) கட்டுநிதி நிதியக் கணக்கிலிருந்தான மற்றும் கணக்கிற்கான மீளப்பெறுகைகளும் மீளளித்தல்களும் செயற்திட்டத்தினால் பேணிவரப்பட்ட புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிக்காட்டப்பட்டிருந்தனவா என்பதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத் திகதியில் உள்ளவாறான மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுடன் இணங்கும் வகையில் மீளளித்தலுக்கான விண்ணப்பங்களை ஆதாரப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்களின் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயமாக நம்பிக்கை கொள்ளமுடிந்திருந்ததா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஓ) நிதி உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

**3. அபிப்பிராயம்**

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்து,

(அ) நிகழ்ச்சித்திட்டமானது 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கட்டுநிதி நிதியக் கணக்கிலிருந்தான மற்றும் கணக்கிற்கான மீளப்பெறுகைகளும் மீளளித்தல்களும் நிகழ்ச்சித்திட்டத்தினால் பேணிவரப்பட்ட புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிக்காட்டப்பட்டிருந்தனவா என்பதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத் திகதியில் உள்ளவாறான மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) நிதி உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுடன் இணங்கும் வகையில் மீளளித்தலுக்கான விண்ணப்பங்களை ஆதாரப்படுத்தவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்களின் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயமாக நம்பிக்கை கொள்ளமுடிந்திருந்தது என்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) நிதி உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**4 நிதிக் கூற்றுக்கள்**

**4.1 நிதிசார் செயலாற்றல்**

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிகழ்ச்சித்திட்டத்தின் செலவினம் முன்னைய ஆண்டிற்கான ரூபா 56,698,642 செலவினத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 91,672,955 ஆக இருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 156,047,049 ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பினை பின்வரும் கூற்று காண்பிக்கின்றது.

| வகுதி | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2013 | 2012 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| தளபாடங்களும் உபகரணங்களும் | 446,450 | 298,550 | 1,849,634 |
| தொழில்நுட்ப ஆலோசனைகளும் கற்கைகளும் | - | 640,408 | 1,017,410 |
| பயிற்சிகளும் செயலமர்வுகளும் | 615,855 | 1,434,556 | 2,273,322 |
| நுண்பாக நிதியளித்தல் மற்றும் இளைஞர் பயிற்சி | 83,394,943 | 40,129,683 | 123,765,784 |
| சம்பளங்களும் படிகளும் | 6,192,991 | 14,044,866 | 25,942,294 |
| தொழிற்பாடுகள் மற்றும் பராமரிப்பு | 1,022,716 | 150,579 | 1,198,605 |
| மொத்தம் | 91,672,955 | 56,698,642 | 156,047,049 |

## 4.2 கட்டுநிதி நிதியக் கணக்கு

நிதிக் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கக் கூடியதாகவிருந்த தகவல்களின் படி, இலங்கை மத்திய வங்கியில் பராமரிக்கப்படுகின்ற மீளாய்வாண்டின் போதான கட்டுநிதி நிதியக் கணக்கின் தொழிற்பாடுகளின் பொழிப்பு கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | ஐக்கிய அமெரிக்க டொலர் | ரூபா |
|---|---|---|
| 2013 ஜனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 2,441,853 | 310,508,039 |
| கூட்டுக: ஆண்டின் போது மீளவைத்தல்கள் | 42,056 | 5,359,490 |
| வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் | - | 6,822,724 |
| | 2,483,909 | 322,690,253 |
| கழிக்க: மீள எடுத்தல்கள் | 1,032,370 | 132,897,183 |
| 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 1,451,539 | 189,793,070 |

## 5. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 5.1 கணக்காய்விற்காக நிதிக்கூற்றுகக்ளைச் சமர்ப்பித்தல்

நிகழ்ச்சித்திட்டத்தின் திருத்திய நிதிக்கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 30 ஆந் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமெனக் கோரப்பட்டிருந்த போதிலும் 2014 செப்தெம்பர் 30 ஆந் திகதியன்றே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

#### 5.2.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியங்களின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டில் நிதிகளின் பயன்பாடு மற்றும் 2013 திசெம்பர் 31 வரையிலான திரட்டிய செலவினம் என்பற்றுடன் தொடர்புடைய சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| மூலம் | நிதி உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக இணங்கப்பட்ட தொகை | | 2013 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பாதீட்டு ஒதுக்கீடு | மீளாய்வாண்டின் போது பயன்படுத்திய நிதிகள் | | 2013 திசெம்பர் 31 வரை பயன்படுத்திய தொகை | |
|---|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொ. மில். | ரூபா மில். | ரூபா மில். | ஐ.அ.டொ. மில். | ரூபா மில். | ஐ.அ.டொ. மில். | ரூபா மில். |
| ஐஎவ்ஏடீ | 25.00 | 3,268.75 | | | | | |
| தனியார் கம்பனிகள் | 5.25 | 686.44 | | | | | |
| சமூக அடிப்படை அமைப்புக்கள் | 0.76 | 99.37 | 400 | 0.71 | 91.67 | 1.12 | 146.04 |
| பங்குபற்றல் நிதியளிப்பு நிறுவனங்கள் | 0.39 | 50.99 | | | | | |
| உற்பத்தியாளர்கள் | 0.57 | 74.53 | | | | | |
| ஜீஓஎஸ்எல் | 0.99 | 129.44 | 20 | - | - | - | 10.01 |
| மொத்தம் | 32.96 | 4,309.52 | 420 | 0.71 | 91.67 | 1.12 | 156.05 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) குறித்துரைக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டக் காலத்தில் நிகழ்ச்சித்திட்டக் குறிக்கோள்கள் அடையப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக முழுமையான செயற்திட்டக் காலத்தையும் உள்ளடக்கியவாறு பொறுப்புக்கள் நிர்ணயிக்கப்பட்ட மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த அடிப்படையில் நிதிசார் மற்றும் பௌதீக இலக்குகளை குறிப்பாக வெளிக்காட்டுகின்ற விரிவான விபரங்களைக் கொண்ட செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டும். இருப்பினும், அவ்வாறான திட்டமொன்று நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவ பிரிவால் தயாரிக்கப்பட்டு அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மேற்படி தகவல்களின் அடிப்படையில் நிகழ்ச்சித்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 4,309.96 மில்லியன் தொகையில் ரூபா 156.05 மில்லியன் மாத்திரம் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தமையால், நிகழ்ச்சித்திட்ட செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து மூன்று ஆண்டுகள் முடிவடைந்த பின்னர் கூட ஒதுக்கப்பட்ட நிதியில் 3.6 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தமையை காட்டப்படுகின்றது. மேலும், நிகழ்ச்சித்திட்டத்தை பூரணப்படுத்துவதற்காக பட்டியலிடப்பட்ட திகதி வரை கிடைக்கக்கூடியதாகவுள்ள நேரகாலம் நிகழ்ச்சித்திட்டத்தின் கூறுகளிற்காக ஒதுக்கப்பட்ட 96.4 சதவீத நிதிகளை பயன்படுத்தவதற்கு போதுமானதாக இருக்காமை அவதானிக்கப்பட்டது. கூறுரீதியாக பயன்படுத்திய நிதி தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செலவின வகை | மதிப்பிடப்பட்ட செலவினம் | | 2013.12.31 இல் உள்ளவாறு திரண்ட செலவினம் | மொத்த ஏற்பாட்டின் சதவீதமாக திரண்ட செலவினம் |
|---|---|---|---|---|
| | ஐ.அ.டொ. | ரூபா | ரூபா | ரூபா |
| மோட்டார் வாகனங்கள் | 603,302 | 78,881,736 | - | - |
| சிவில் வேலைகள் | 3,474,531 | 454,294,928 | - | - |
| உபகரணங்களும் பொருட்களும் | 3,290,530 | 430,236,797 | 1,849,634 | 0.43 |

| | | | | |
|---|---|---|---|---|
| தொழில்நுட்ப ஆலோசனைகளும் கற்கைகளும் | 1,446,826 | 189,172,500 | 1,017,409 | 0.53 |
| பயிற்சிகளும் செயலமர்வுகளும் | 3,926,244 | 513,356,403 | 2,273,322 | 0.44 |
| சேவை வழங்குனர் ஒப்பந்தங்கள் | 3,091,733 | 404,244,090 | - | - |
| கடன் | 8,817,363 | 1,152,870,212 | 123,765,785 | 10.73 |
| பங்கு மூலதனம் | 7,125,221 | 931,622,646 | - | - |
| சும்பளங்களும் படிகளும் | 985,661 | 128,875,176 | 25,942,294 | 20.12 |
| தொழிற்பாடுகளும் பராமரித்தலும் | 201,917 | 26,400,648 | 1,198,605 | 4.54 |
| மொத்தம் | 32,963,328 | 4,309,955,136 | 156,047,049 | 3.62 |

### 5.2.2 பௌதீக செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதி உடன்படிக்கையின் 1 ஆம் பட்டோலையின் 7.2(ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் நிகழ்ச்சித்திட்டத்திற்கான வருடாந்த செயன்முன்னேற்ற அறிக்கைகள் தயாரித்து சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். செயற்திட்டத்தினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் பௌதீக செயன்முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு இயலுமான வகையில் மீளாய்வாண்டிற்கான அவ்வாறான அறிக்கை நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவ பிரிவினால் தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நுண்பாக நிதியளித்தல் கடன் திட்டத்தினை அமுல்படுத்தவதற்காக நிகழ்ச்சித்திட்டத்தினால் இலங்கை மத்திய வங்கி மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கி ஆகியவற்றுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடப்பட்டிருந்தது. கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி, பிரதேச அபிவிருத்தி வங்கி மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு ரூபா 148.7 மில்லியன் கூட்டுத்தொகையான உப கடன்களை வழங்கியிருந்ததுடன் அதில் ரூபா 113.5 மில்லியன் மாத்திரம் நிகழ்ச்சித்திட்டத்தினால் மீள்நிதியிடப்பட்டிருந்தது. நுண்பாக நிதியளித்தல் கடன் திட்டம் தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்டிருந்த செயற்பாட்டு அறிவுறுத்தல்கள் பிரதேச அபிவிருத்தி வங்கியால் முறைப்படியாக பின்பற்றப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அதன் காரணமாக எஞ்சிய ரூபா 35.2 மில்லியன் தொகையின் மீள்நிதியிடல் நிகழ்ச்சித்திட்டத்தினால் நிறுத்தப்பட்டிருந்தது.

(இ) பிரதேச அபிவிருத்தி வங்கி கிளை மட்டத்தில் நுண்பாக நிதியளித்தல் கடன்களின் மீது 13.25 சதவீதம் முதல் 20 சதவீதம் வரையான வீச்சிலமைந்த வேறுபட்ட வட்டி வீதங்களை தாக்கல் செய்திருந்தமை அவதானிக்கப்பட்ட போதிலும், வருடத்திற்கான குறித்துரைத்த வட்டி வீதம் 12.25 சதவீதமாக இருந்தமையால் நுண்பாக நிதியளித்தல் கடன் திட்டத்தின் உள்ளபடியான நலன்கள் கீழ் மட்டத்தினர்களிற்கு சென்றடையாதிருந்தமையை காட்டுகின்றது.

(ஈ) நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்படுகின்ற மாவட்டங்களில் சமுர்த்தி வங்கிகள் போன்ற நுண்பாக நிதியளிப்பு நிறுவனங்கள் போதியளவில் காணப்பட்ட போதிலும், நுண்பாக நிதியளித்தல் உப கூறினை நிறுத்துதல் வேண்டுமெனவும் எஞ்சியுள்ள நிதிகளை கூறு 1 இலுள்ள பெறுமதி சங்கிலி அபிவிருத்திக்கு (Value Change Development) மீள் ஒதுக்கீடு செய்தல் வேண்டுமெனவும் அமுலாக்கல் ஆதரவு நிகழ்ச்சித்திட்ட பிரதிநிதிகள் பரிந்துரை செய்திருந்தனர். இருப்பினும், இந்த நிலைமை நிகழ்ச்சித்திட்டத்தின் வடிவமைத்தல் கட்டத்தில் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(உ) நிகழ்ச்சித்திட்ட வடிவமைப்பு அறிக்கையின் 135 ஆம் பந்தியின் பிரகாரம், உப கடன்களிற்கு நிதியளிப்பதற்காக சுழற்சி நிதியமொன்று தாபிக்கப்பட்டு எதிர்வரும் 15 ஆண்டுகளிற்காக செயற்படுத்தப்படுதல் வேண்டும். ஆகையால், பிரதேச அபிவிருத்தி வங்கி ரூபா 14,627,919 தொகையினை இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்பியிருந்ததுடன் அனுப்பியிருந்த தொகை மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு இலங்கை மத்திய

வங்கியின் உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்திலுள்ள நடைமுறைக் கணக்கொன்றில் வைக்கப்பட்டிருந்தது. மேலும், நுண்பாக நிதியளித்தல் கூறு இடைநிறுத்தப்பட்டிருந்தமையால் அவ்வாறு அனுப்பிவைக்கப்பட்ட தொகையினை நிகழ்ச்சித்திட்டத்திற்கு மீளப்பெறுவதற்கு நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவ பிரிவு முயற்சி எதுவும் எடுத்திருக்கவில்லை.

(ஊ) நிகழ்ச்சித்திட்டத்தினால் ரூபா 3,161.54 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 24.18 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், பெறுமதி சங்கிலி அபிவிருத்தி மற்றும் சந்தை தொடர்புறுத்தல் கூறுகளின் கீழ் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட எந்தவொரு செயற்பாடுகளும் 2013 திசெம்பர் 31 வரை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(எ) நிகழ்ச்சித்திட்டத்தின் மீளாய்வாண்டிற்குரிய கொடுக்கல்வாங்களிற்கான உள்ளகக் கணக்காய்வு நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஏ) நிகழ்ச்சித்திட்டச் சொத்துக்கள் பௌதீகமாக காணப்படுவதனை உறுதிப்படுத்தவதற்காக நிதிப்பிரமாணம் 756 இன் பிரகாரம் தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பான வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.